தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆடி 25, திருவள்ளுவர் ஆண்டு 2047

2016 ஆகஸ்ட் 9, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக."

படிப்பதற்குரிய நூல்களைக் குற்றம் இல்லாமல் கற்க வேண்டும். அதன் பிறகு கற்ற நூல்களில் அறிந்து கொண்டதற்குத் தக்கவாறு வாழ்க்கையில் அவற்றைப் பின்பற்றி நடக்க வேண்டும்.

1. வினாக்கள்-விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

38—

தடுப்பணை

***1356—திரு. எம். தமிமுன் அன்சாரி:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம் தொகுதியிலுள்ள கடுவையாறு மற்றும் வெட்டாற்றின் குறுக்கே தடுப்பணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

நாகப்பட்டினம் தொகுதியில் ஓடுகின்ற கடுவையாறு மற்றும் வெட்டாறு ஆகிய ஆறுகளின் குறுக்கே சமநிலைப்பொறி (Regulator) *அமைக்க ஆய்வு செய்யப்பட்டு வருகிறது என்பதை தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள்.*

திரு. எம். தமிமுன் அன்சாரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகப்பட்டினம் மாவட்டம் கடைமடை பகுதியாக இருக்கிறது. காவேரியினுடைய கிளை ஆறுகள் இங்குதான் கடலிலே கலக்கின்றன. கடுவையாறு, வெட்டாறு போன்ற சிற்றாறுகளுக்குக் குறுக்கே தடுப்பணைகள் கட்டுகின்ற முயற்சிகளை நாம் தொடங்குவோமேயானால், இதன்மூலம் நீராதாரங்கள் பாதுகாக்கப்பட்டு, விவசாய நிலங்களுக்கும், குடிநீருக்கும் மிகப் பெரிய நன்மை ஏற்படும். இதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்திலே கொண்டு முயற்சி செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆய்வு செய்யப்படும் என்று சொல்லியிருக்கிறார். அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி, நன்றி சொல்லி முடித்துவிட்டீர்களா? குறுக்கீடு சரி.*

வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. முருகன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.